பக்கங்கள்: எட்டு

Regist ered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 9 திங்கட்கிழமை (25-8-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 259

## மட்டக்களப்பில் படை நிலைகள் மீது புலிகள் நேற்று மாலை ஷெல் வீச்சு!

கொழும்பு, ஓக. 25

விடுதலைப் புலிகள் நேற்று மாலை 6 மணிக்கு மட்டக்களப்பில் இராணுவ நிலையங்கள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

மட்டக்களப்பு பிரதான இராணுவ தலைமைக் காரியாலயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் உயிரிழந்தனர், 18 படையினர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலால் சுற்றுவட்டாரத்தில் உள்ள சில கிராமங்கள் பாதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்லடியில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்த 6 பேர் மட்டக்களப்பு ஆஸ்பத்ரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்திலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

மட்டக்களப்பு விமானப்படை முகாம் மீதும் ஷெல் தாக்குதல் இடம்பெற்றது. ஆனால் அங்கு சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

போரதீவு, வவுணதீவு ஆகிய இடங்களில் இருந்து இத்தாக்குதல்கள் இடம் பெற்றிருக்கலாம் என்று படைவட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகள் 15 ஷெல்களை ஏவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-21)

### ஐ. நா. அதிகாரி இன்று வருகை

கொழும்பு, ஓக. 25

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர் பலி எடியாவ இன்று கொழும்பு வருகிறார்.

இவர் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்துக்கும், 30 ஆம், 31 ஆம் திகதிகளில் மட்டக்களப்புக்கும் விஜயம் செய்வார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி வரை இவர் இலங்கையில் தங்கியிருப்பார்.

(இ-21-3)

## கடும் சமர் ஒன்றுக்கு இரு தரப்பும் முஸ்தீபு!

### புளியங்குளம் சந்தியை நோக்கி படையினர் எந்நேரமும் நகரலாம்

வவுனியா, ஓகஸ்ட் 25

**புளியங்குளம் ரயில் நிலையத்தில் தரித்து நிற்கும் 'வெற்றி உறுதி' படையினர் எந்நேரமும் புளியங்குளம் சந்தியை நோக்கி நகரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி நகரும் பட்சத்தில் புளியங்குளம் சந்தியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சமர் மூளலாம் என செய்தி ஸ்தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன.**

கடந்த இரு தினங்களாக புளியங்குளத்தில் அமைதி நிலவுவதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

படையினரின் அடுத்த நகர்வை எதிர்பார்த்து புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றுக்கு தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினரும் யுத்த ஆயத்தங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் —

எந்நேரமும் அடுத்த நகர்வு ஆரம்பமாகலாம் என்றும் — வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் புளியங்குளத்துக்கு தெற்கே பெரியமடு இராணுவ கட்டளைத் தலைமையகப் பகுதி மீது வெள்ளி இரவு புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் 3 இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு ஓமந்தைக்கு வடமேற்குப் பகுதியில் இராணுவ முன்னணி காவலரண் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு றிசேர்வ் பொலிஸார் உயிரிழந்தார்.

ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் என மூன்று இடங்களுக்கு பிரிந்து செல்வதால் புளியங்குளம் சந்தி தற்போதைய போர் நிலையில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

## புலிகளினால் கடத்தப்பட்ட கப்பலை கொரிய மாலுமிகள் பார்வையிட்டனர்

### அப்பகுதியில் அரசு – புலிகள் தாக்குதல் நிறுத்தம்

கொழும்பு, ஓக. 25

கடந்த மாதம் 8 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு முல்லைத்தீவுப் பகுதியில் தரித்து நிற்கும் வடகொரியக் கப்பலான ''மொராங்பொங்'' கை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளுடன் சென்று வடகொரிய மாலுமிகள் பார்வையிட்டனர்.

இதற்காக திருகோணமலை - புதுக்குடியிருப்பு வீதியிலும் —

கப்பல் தரித்துள்ள இடத்தில் இருந்து மூன்று மைல் சுற்றளவுப் பிரதேசத்திலும் — விடுதலைப் புலிகளும், இலங்கைப் படையினரும் தாக்குதல் நிறுத்தம் ஒன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

கப்பலை எவ்வாறு திருகோணமலைக்கு எடுத்துச் செல்வது என்பது குறித்து அங்கு வடகொரிய மாலுமிகள் ஆராய்ந்தனர்.

இன்று கொழும்பு திரும்பும்

(8ஆம் பக்கம் பார்க்க)

### பாதுகாப்பு அமைச்சில் இன்று முக்கிய மாநாடு

கொழும்பு, ஓகஸ்ட் 52

வடக்குக்கான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக முக்கிய மாநாடு ஒன்று இன்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெறுகிறது.

இம்மாநாட்டுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் சேவை நடத்துவதில் உள்ள சிக்கல் குறித்து விரிவாக ஆராயப்படும்.

(இ-3)

### படையினர் பதில் தாக்குதல் கன்னன்குடாவில் இருவர் பலி

மட்டக்களப்பு, ஓக. 25

மட்டக்களப்பு நகர் மீது நேற்று மாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலையடுத்து இராணுவம், விமானப்படை இணைந்து மேற்கொண்ட பதில் தாக்குதலில் 2 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

படையினர் ஏவிய ஷெல்கள் கன்னன்குடா, நாவற்குடா வவுணதீவு ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததில் இறந்த இரு பொதுமக்களின் சடலங்களும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

பெருமளவிலான பொதுமக்கள் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்ட போதும் அவர்களின் விவரங்கள் கிடைக்க

[8 ஆம் பக்கம் பார்க்க]

### படையினர் பிடித்த இடங்களில் பொதுமக்கள் எவரும் இல்லை

#### பத்திரிகையாளர் ஒருவர் தகவல்

வவுனியா, ஓக. 25

வன்னியில் படையினரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் எந்தவொரு பொதுமக்களையும் காண முடியவில்லை என்று கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது.

வவுனியாவில் இருந்து அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுடன் போர் முனைக்குச் சென்ற பத்திரிகையாளர்களில் நானும் ஒருவன்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### உயிலங்குளம் ஊடாக மக்கள் வர படையினர் அனுமதி மறுப்பு

வவுனியா, ஓக. 25

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியிதிருந்து உயிலங்குளம் ஊடாக பொதுமக்களை இராணுவல் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிப்பதை இராணுவ அக்காரிகள் தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர் என மன்னார் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 16 ஆம் திகதி உயிலங்குளம் தடைமுகாம் பகுதியில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதையடுத்தே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்துவதைத் தடுக்கும் வகையில் படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்துகின்றனர்.

எனினும் மன்னார் நகரில் இருந்து உயிலங்குளம் ஊடாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

(இ-3)

### படையினரின் இரு சடலங்கள் செஞ்சிலுவையிடம் ஒப்படைப்பு

வவுனியா, ஓக. 25

கடந்த வெள்ளியன்று ''வெற்றி உறுதி'' நடவடிக்கைத் துருப்பினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் இரு படையினரின் சடலங்களைக் கைப்பற்றினர்.

அவ்விரு சடலங்களும் நேற்று முழங்காவிலில் வைத்து விடுதலைப் புலிகளின் பிரமுகர் தயாநிதியால் வடக்கு — கிழக்கு செஞ்சிலுவைச்சங்க இணைப்பாளர் சிவநாதன் கிஷோரிடம் கையளிக்கப்பட்டன.

அவர் பின்னர் படையினரிடம் அவற்றை ஒப்படைத்தார்.

(இ-164-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## V. P. மரியாம்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட V P மரியாம்பிள்ளை 23-08-97இல் காலமானார்.

இவர் இராசமணியின் அன்புக்கணவரும், பற்றிக் (கணக்காளர், நீர்ப்பாசன இலாகா, கண்டி), பேசி (லண்டன்), ஜொய்ஸ் (கனடா), அருட்தந்தை றெஜி இராஜேஸ்வரன் (அதிபர், புனித மாட்டீனார்குருமடம்) யோகேஸ்வரன் (C.T B, வவுனியா), அமிர்தினி, அருளேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினி (கண்டி), வாலாம்பிகை (லண்டன்), வென்டக்கோன் (கனடா), சாந்தம் (வவுனியா), கிறிஸ்ரி ராஜ் (உரிமையாளர், றாடோ காமன்ஸ்), மாலதி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற யேம்ஸ் சின்னராசா மற்றும் அருளானந்தம் (ஆசிரியர்), அழகரெட்ணம், டெனிஸ், திருமதி அன்னம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சியாமலா, நிலானி, மைதிலி, வதனி, மார்க், சுரேஷ், நிறஞ்சன் நிர்மலன், பவானி, தர்ஷினி, வெனிற்றோ, சுவிஜினி அஜந்தா, அகிலன், றமணன், வருணன், சஞ்சு, தீபிக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25-08-97) திங்கட்கிழமை பி. ப. 3-30 மணிக்கு (இலங்கை நேரம்) யாழ். மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

அருட்தந்தை றெஜி இராஜேஸ்வரன்
(மகன்)

931/13, வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(49206)

## திருமதி தேவாமிர்தம் இராமலிங்கம்

கலைமகள் வீதி, அரியாலையைச் சேர்ந்த திருமதி தேவாமிர்தம் இராமலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் இளைப்பாறிய அதிபரும், சமாதான நீதிவானுமாகிய நா. இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமலிங்கம் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்) அவர்களின் அன்புத் தங்கையும், திருமதி மாலினிதேவி தேவராசா, திருமதி ரோகிணிதேவி தர்மகுலசிங்கம், இ. இரவீந்திரன் (சிறு கைத்தொழில் திணைக்களம், யாழ்.), இ. மகேந்திரன் (யா / ப. நோ. கூ. ச.), இ. குலேந்திரன் (யாழ். பல்கலைக்கழகம்), இ. சத்தியேந்திரன் (யாழ். பல்கலைக்கழகம்), இ. திலகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், த. தேவராசா (கிராமசேவையாளர், கொழும்புத்துறை), ஐ. தர்மகுலசிங்கம் (யாழ். மாநகரசபை), திருமதி புளோரா ரேணுகா, திருமதி ம. இரஞ்சினி (ஆசிரியை, விக்னேஸ்வரா வித்தியாலயம்), திருமதி கு. ரவீந்திராதேவி (பிரதேச செயலகம், நல்லூர்), திருமதி ச. சுமதி (யாழ். மாநகரசபை), திருமதி தி. மஞ்சுளா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கலைமகள் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று 25-8-97 திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:

நா. இராமலிங்கம்
கணவர்
(சமாதான நீதிவான்)

[49211]

## சுப்பிரமணியம் ரவிகாந்தன் (ஈசன்)

(முன்னை நாள் லங்கா சிமெந்து லிமிட்டெட் ஊழியர்)

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ரவிகாந்தன் 18-08-97இல் கொழும்பில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் -- பத்மாவதி ஆகியோரின் அன்பு மகனும், சின்னத்துரை--பத்மாவதி ஆகியோரின் அருமை மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், தயாபரன், தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி கந்தசாமி, காலஞ்சென்ற செல்வரத்தினம், புஸ்பராணி, விஜயராணி, ஜெயராசா, புஸ்பராசா, விஜயராசா ஆகியோரின் மைத்துனரும், ஞானகுரு, ஜெயபாலசிங்கம், ரஞ்சினிதேவி, மகேந்திரராசா ஆகியோரின் சகலனும், ஆனந்தராசா, சிவராசா, உதயகுமார் (கனடா), காலஞ்சென்ற தேவரா்ணி, சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23-08-97 அன்று கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி. கந்தசாமி
(மைத்துனர்)

தற்போதைய முகவரி:
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(49209)

## குப்பைக்குள் கிடந்த ஷெல் வெடித்தது

மீளக்குடியேறுவதற்காக வளவினை துப்புரவு செய்யும் நோக்குடன் குப்பைக்குத் தீ மூட்டிய போது பயங்கர சத்தத்துடன் ஷெல் ஒன்று வெடித்தது. குப்பைக்கு தீ மூட்டியவர் தெய்வாதீனமாகக் காயமின்றித் தப்பித்துக் கொண்டார். அளவெட்டி அலுக்கை என்ற இடத்தில் கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றது.

குப்பைக்குத் தீயை மூட்டிவிட்டு சற்று அப்பால் சென்றிருந்த வேளையே ஷெல் வெடித்ததால் அவர் காயமின்றித் தப்பினார். (ஐ-15)

## மீளாய்வு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் பெயர்ப் பட்டியல்கள் சமூக சேவை உத்தியோகத்தரினால் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களில் ஒரு பகுதியினர் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து வன்னிப் பகுதியில் தற்போது வாழ்ந்து வருகின்றனர். (ஐ-36)


எமது புதிய வெளியீடுகள்

மகேஸ் — வடிவேலு
மனோரமா
**சாதிசனம்**
விக்னேஷ் — கவலக்ஷ்சுமி
**காதல்பள்ளி**
விக்ரம் — வினிதா
சுரேஸ்கோபி
**அரண்மனை வாசல்**

**வீடியோவிமல்**
**யாழ்ப்பாணம்.**
(49210)


## இதய அஞ்சலி

எமது ஆலயப் பணிகளுக்கு பெரிதும் துணைசெய்த
குடும்பத் தலைமகள்
தெல்லிப்பழை

### திருமதி சிதம்பரம் முருகேசபிள்ளை

அவர்கள் கொழும்பில் 19-08-97 இல் காலமானது குறித்து எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

(சி/1386)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி அருளேஸ்வரி பொன்னுத்துரை

சாவகச்சேரி கோயில் குடியிருப்பைச் சேர்ந்தவரும்,
எமது ஆலய பரிபாலன சபைச் செயலாளருமான
திரு. க. பொன்னுத்துரை
அவர்களின் அன்புத துணைவியார்

**திருமதி அருளேஸ்வரி பொன்னுத்துரை**

அவர்கள் கொழும்பில் காலமானதையிட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**- ஆலய பரிபாலன சபையினர்**
**ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலயம்,**
கோயில் குடியிருப்பு,
சாவகச்சேரி.

(சி/1384)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் துரையப்பா வசந்தகுமார்

எமது பாடசாலையில் கடமையாற்றிய
முன்னாள் ஆசிரியை

**செல்வி இராஜேஸ்வரி துரையப்பா**

அவர்களின் அன்புச் சகோதரன் து. வசந்தகுமாரின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**யா/புங்குடுதீவு**
**ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய**
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்


# முயற்சி

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திறன் விருத்தி மையம்

**பயிற்சி நெறிகள் ஆரம்பம்**
**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

| பயிற்சி நெறிகள் | வேண்டப்படும் தகைமைகள் |
| --- | --- |
| 1. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து (கிழமையில் ஐந்து நாள்கள்) | க. பொ. த. (சாதாரணம்) தமிழ் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி. |
| 2. தமிழ்/ ஆங்கில தட்டச்சு (சனி, ஞாயிறு வகுப்புகள் - வேலை செய்வோர், உயர்கல்வி கற்போருக்கு முன் உரிமை) | க. பொ. த. (சாதாரணம்) தமிழ்/ ஆங்கிலம் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி. |
| 3. தையல் இயந்திரம் திருத்துதல் (சனி, ஞாயிறு வகுப்புகள் - பெண்களுக்கு முன்னுரிமை) | க. பொ. த. (சாதாரணம்) ஆறு பாடங்களில் சித்தி. |
| 4. தட்டச்சு இயந்திரம் திருத்துதல் (சனி, ஞாயிறு வகுப்புகள் - பெண்களுக்கு முன்னுரிமை) | ,, ,, |
| 5. வயறிங் — றிவைண்டிங் (கிழமையில் ஐந்து நாள்கள்) | ,, ,, |
| 6. நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல்— குழாய்பொருத்துதல் (கிழமையில் ஐந்து நாள்கள்) | ,, ,, |
| 7. உடையமைத்தல் (கிழமையில் ஐந்து நாள்கள்) | ,, ,, |

**0 பயிற்சிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.**
**விண்ணப்ப முடிவு திகதி: 05-09-1997**
சுயவிவரங்களுடன் விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
**106, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

அ. நல்லதம்பி — உபதலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.

(சி/1385)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ★ லட்சக்கணக்கானோரின் மரணத்துக்குப் பொறுப்பேற்று

# உலகின் மிகப்பெரிய சிகரட் உற்பத்தி நிறுவனம் புகைத்தலின் தீமையை ஒப்புக்கொண்டது!

நியூயோர்க், ஒக. 25

புகையிலை ஓர் ஆள்கொல்லி என்றும், ஆபத்தான பொருள் என்றும் உலகின் மிகப்பெரிய சிகரட் உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான பிலிப் மொறிஸ் நிறுவனம் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளது.

தமது நிறுவனம் தயாரித்த சிகரட்டுக்கள் லட்சக் கணக்கான அமெரிக்கர்களின் மரணத்துக்குப் பொறுப்பாக இருந்திருக்கக் கூடும் என்று பிலிப் மொறிஸ் நிறுவனத்தின் தலைவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

சிகரட் உற்பத்தித்துறையின் முக்கிய தலைமை நிர்வாகி ஒருவர் புகையிலையின் பாதிப்புக்களை இவ்வாறு முதற் தடவையாக ஒப்புக் கொண்டிருப்பது ஒரு முக்கியமான திருப்புமுனை என்று அமெரிக்காவின் புளோரிடா நகர சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

சிகரட் தொழிற்சாலை ஒன்றுக்கு எதிராக புளோரிடாவில் அமெரிக்க அரசு சார்பாகத் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணையின் போதே பிலிப் மொறிஸ் நிறுவனத்தின் தலைவர் ஜெப்றி பைபிள் புகைத்தலின் தீமையை ஒப்புக் கொண்டார்.

சுமார் இரண்டு மணிநேரம் அரச சட்டத்தரணிகள் அவரை விசாரணை செய்தனர்.

இதுவரை அமெரிக்காவில் சிகரட் உற்பத்தி செய்யும் பெரிய நிறுவனங்கள் அதன் தீமையை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டதில்லை. ஒரேயொரு சிறிய சிகரட் தொழிற்சாலை மட்டுமே புகையிலை ஓர் ஆள்கொல்லி என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது.

பிலிப் மொறிஸ் நிறுவனத்தின் தலைவர் புகையிலையின் தீமையை தற்போது பகிரங்கமாக ஏற்றுக் கொண்டிருப்பது புகைத்தலால் ஏற்படும் பாதிப்புக் குறித்து இழப்பீடு கோரிச் சட்ட நடவடிக்கையில் இறங்கியிருப்போருக்கு பெரும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது என அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (ஐ)

## பாகிஸ்தான் எல்லையில் மூவர் பலி!

இஸ்லாமாபாத், ஒக. 25

காஷ்மீரில் இந்திய-பாகிஸ்தான் எல்லையில் 3 பேரை இந்தியா நேற்று முன்தினம் சுட்டுக்கொன்று விட்டதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையில் திட்டமிடப்பட்டுள்ள அமைதிப்பேச்சைக் குலைக்கவே இந்தத்தாக்குதல் மேற்கொளளப்பட்டதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

3 பேர் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்திய பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சு, மேலும் மூவர் காயமடைந்தனர் என்றும்–

நேற்று முன்தினம் காலை ஆரம்பித்த இந்தத்தாக்குதல் சம்பவம் மாலை வரை தொடர்ந்ததாகவும் தெரிவித்தது.

(ஐ-5)

### முன்னாள் ஸம்பிய அதிபர்

# கெனத் கவுண்டா மீது பொலீஸார் சூடு!

லுசாக்கா, ஒக. 25

ஸம்பியாவின் முன்னாள் ஜனாதிபதி கெனத் கவுண்டா நேற்று முன்தினம் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

எதிர்க்கட்சித் தலைவரான அவர் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுவதற்காக வந்துகொண்டிருந்த சமயம் பொலீஸாருக்கும் அவரது கட்சி ஆதரவாளர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. கவுண்டாவின் கார் மீது பொலீஸார் துப்பாக்கியால் சுட்டனர். கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து பொலீஸார் கூட்டத்தைக் கலைத்தனர். 73 வயதான கவுண்டாவை படுகொலை செய்ய பொலீஸார் மேற்கொண்ட முயற்சி இதுவாகும் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பொலீஸார் சுட்ட சமயம் துப்பாக்கிச் சன்னம் அவரது நெற்றியைத் தாக்கியது.

1991 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் தோல்வியடைந்த கவுண்டா, ஸம்பியாவில் மாத்திரமன்றி ஆபிரிக்கக் கண்டத்திலும் பிரபல்யமான அரசியல்வாதியாகக் கருதப்படுகிறார். (ஐ-5)

# தீவிரவாதிகள் தாக்குதல் கென்யாவில் மூவர் பலி!!

மொம்பாசா, ஒக, 25

கென்யாவில் கரையோர நகரமான மொம்பாசாவில் உள்ள கத்தோலிக்க தேவாலய வளாகத்துக்குள் புகுந்த ஆயுத பாணிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொது மக்கள் இரு வரும் பொலீஸார் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

கென்யாவின் பல இடங்களிலும் அண்மையில் இடம்பெற்ற கலவரங்களில்இருந்து தப்புவதற்காக இடம்பெயர்ந்து சென்ற மக்கள் இத் தேவாலய வளாகத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

சமஷ்டி ஆட்சி முறையை ஆதரிக்கும் கடும் போக்காளர்களே இந்த வன்முறைக்குக் காரணம் என்று மொம்பாசாவின் கத்தோலிக்க மேற்றிராணியார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

சண்டைகளில் இருந்து தப்ப விரும்பும் பொதுமக்களுக்கு கூடுதலான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

நாட்டில் கடந்த ஒரு வார காலத்திற்கு முன் கலவரங்கள் வெடித்ததைத் தொடர்ந்து கென்ய அதிபர் மொம்பாசாவுக்கு விஜயம் செய்யவிருந்த சமயம் இத் தாக்குதல் இடம் பெற்றிருக்கிறது. (ஐ)

# புது வித சளிச் சுரம் உலகில் பரவும் ஆபத்து

ஹொங்கொங், ஒக. 25

மனிதர்களில் முன்னர் காணப்பட்டிராத புது விதமான சளிக் காய்ச்சல் இன்புளு வென்ஸா) கிருமி இனம் ஒன்றை ஆராய்ச்சி செய்வதற்காக சர்வதேச மருத்துவ நிபுணர்கள் குழு ஒன்று ஹொங்கொங் சென்றுள்ளது.

ஹொங்கொங்கில் கடந்த மேமாதம் உயிரிழந்த மூன்று வயதுச் சிறுவன் ஒருவனின் உடலில் இந்தப் புதிய சளிக் காய்ச்சல் கிருமி வர்க்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

1950 களிலும் 60 களிலும் ஹொங்கொங்கில் இருந்து உலகெங்கும் பெரும் கொள்ளை நோயாகப் பரவிய சளிக்காய்ச்சல் மீண்டும் பரவலாம் என்ற அச்சத்தை இச்சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

தற்போது கண்டுபிடிக்கப் பட்ட இந்த புதிய சளிக் காய்ச்சல் கிருமியை கோழிக் குஞ்சுகளில் பரீட்சித்துப் பார்த்த போது ஆயிரக்கணக்கான கோழிக்குஞ்சுகள் பலியாகின.

இறந்த மூன்று வயதுச் சிறுவனின் உடலிலும் இதே கிருமி இனம் காணப்பட்டது. (ஐ)

### ஜாலியன் வாலாபாக் படுகொலை:

# இந்தியாவிடம் மகாராணி மன்னிப்புக் கோரமாட்டார்!

## மலரஞ்சலி செலுத்துவார்

லண்டன், ஒக. 25

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ள எலிஸபெத் மகாராணியார் சீக்கியர்களின் புனித நகரமான அமிர்தசரஸுக்கும் செல்வார் என்று லண்டனில் தெரிவிக்கப்படுகிறது.

உலக அரங்கில்

அமிர்தசரஸ் நகருக்குச் செல்ல மகாராணியாரை அனுமதிப்பதில் தாங்கள் இணக்கம் கண்டிருப்பதாக பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய பிரிட்டிஷ்அதிகாரிகள் ''சண்டே டெலிகிறாப்'' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளனர்.

1919ஆம் ஆண்டு அமிர்தசரஸ் பகுதியில் நூற்றுக் கணக்கான இந்திய விவசாயிகள் பிரிட்டிஷ் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக எலிஸபெத் மகாராணி மன்னிப்புக் கோரமாட்டார் என்றும் –

ஆனால் படுகொலை நிகழ்ந்த இடத்தில் மலர் வளையம் ஒன்றை வைத்து ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவார் என்றும் ''சண்டே ரெலிகிறாப்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

''ஜாலியன் வாலாபாக் படுகொலைகள்'' என வரலாற்றில் குறிப்பிடப்படும் இந்த மிலேச்சத்தனமான சம்பவத்தின்போது அறுவடை விழாவை அமைதியாகக் கொண்டாடிக் கொண்டிருந்த விவசாயிகளைக் கலைப்பதற்காக பிரிட்டிஷ் படையினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இச்சம்பவத்தில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் பலியாகினர்.

இந்த சம்பவத்துக்குப் பொறுப்பேற்று மகாராணி மன்னிப்புக் கோரவேண்டும் என்று இந்தியாவில் குரல் எழுப்பப்பட்டுள்ளது.

இந்திய சுதந்திரப் பொன் விழாவை ஒட்டிய இந்த விஜயத்தின் போது மகாராணி அமிர்தசரஸுக்குச் செல்வது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மகாராணி அமிர்தசரஸுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்தியப் பிரதமர் ஐ.கே. குஜ்ரால் கடந்த வாரம் பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

பஞ்சாப்பில் உள்ள சீக்கிய மதத் தலைவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

எலிஸபெத் மகாராணி அமிர்த சரஸுக்கு விஜயம் செய்வதையோ புனித பொற்கோயிலைத் தரிசிப்பதையோ தடை செய்யக் கூடாது என்று இந்தியாவில் சீக்கிய மத தலங்களை நிர்வகிக்கும்ஸ்தாபனத்தின்தலைவரான குர்சயன்சிங்தோரா வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிலையில் மகாராணி இந்தியாவின் எந்தப் பகுதிக்கும் செல்லலாம்; அதற்குத் தடை ஏதும் இல்லை என்று பிரதமர் குஜ்ரால் கடந்த வார இறுதியில் தெரிவித்திருந்தார்.

இந்தியாவின் 50 ஆவது சுதந்திரதின பொன்விழாவை ஒட்டியதாக அவரது விஜயம் அமைகிறது. இந்திய–பிரிட்டிஷ் உறவுகள் நல்ல நிலையில் உள்ளன. எனவே மகாராணியாரின் நல்லெண்ண விஜயத்தின் போது விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெறுவதைத் தவிர்க்கும் பொருட்டே இது பற்றி அரசு அண்மையில் மகாராணியாருக்கு அறிவித்ததாக பிரதமர் குஜ்ரால் கூறியுள்ளார்.

(ஐ)

## ஈரானில் துணை அதிபராக பெண்

தெஹ்ரான், ஒக. 25

ஈரானின் புதிய அதிபர் முஹமட் ஹத்தாமி 5 துணை அதிபர்களை நியமித்துள்ளார். இவர்களுள் ஒரு பெண்ணும் அடங்குவார்.

1979 இல் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர் ஈரானிய அமைச்சரவையில் பெண் ஒருவர் இடம் பெறுவது இதுவே முதற்தடவை.

துணை அதிபராகப் பதவியேற்றுள்ள மஸ்ஹமி எப்தஹா சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்பின் தலைமைப் பொறுப்பையும் ஏற்கின்றார். அமெரிக்காவில் கல்வி கற்ற 36 வயதான இவர் தெஹ்ரான் ஆசிரிய பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆவார். (ஐ)

# சனிக்கிரகத்துக்கு அமெரிக்க விண்கலம்

### ஒக்ரோபர் 6 இல் புறப்பாடு

கேப் கனவெரல், ஒக. 25

சனிக் கிரகம் தொடர்பான ஆய்வுகளை அமெரிக்கா மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி 340கோடி டொலர் செலவிலான ''டிரான்- 4- 'பி' '' ஏவுகணை மூலம் 'கஸ்ஸினி' என்ற விண்கலம் சனிக்கிரகத்துக்கு அனுப்பப்படவுள்ளது.

இந்த விண்கலம் 2 ஆயிரத்து 4 ஆம் ஆண்டு சனிக் கிரகத்தைச் சென்றடையும்.

சனிக் கிரகத்தை சுற்றி வலம் வரும் கஸ்ஸினி அக்கிரகம் பற்றிய படங்களையும் தகவல்களையும் சுமார் 4 ஆண்டு காலம் தொடர்ந்து பூமிக்கு அனுப்பி வைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐரோப்பிய விண்வெளி ஏஜென்ஸியினால் அமைக்கப்பட்ட சிறிய உப கலம் ஒன்றை கஸ்ஸினி விண்கலம் சனியின் உப கோளான டிடானில் தரையிறக்கும். (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நடராஜா ஜெயராஜ் என்பவரது 71249166X இல. தேசிய அடையாள அட்டை 18. 08. 97 அன்று மாநகர சபை எல்லைக்குள் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் நடராஜா ஜெயராஜ், 53, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [சி/1382]

### மணமகள் தேவை

குருகுலம், திருவாதிரை நட்சத்திரம் 3 ஆம் பாதம் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் 31 வயதுடைய மணமகனுக்கு 28 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். சாதகம், படம் என்பவற்றை அனுப்பவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும். தொடர்பு: மே/ பா, 649, உதயன், யாழ்ப்பாணம்.

(49138)

### மலிவு விற்பனை

ஊர்காவற்றுறை சண்முக வித்தியாலயத்துக்கு அருகில் 10 பரப்பு காணி மலிவு விற்பனைக்குஉண்டு. தொடர்பு: வே. த. காசிநாதன், 3ஆம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

[49158]

### விண்ணப்பப் படிவம்

மொறட்டுவைப் பல்கலைக் கழக தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கான படிவம் விற்பனையாகிறது. நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

[47391]

### விற்பனைக்கு

3 மாத பொமனேரியன் வெள்ளை ஆண், கறுப்பு பெண் நாய்க்குட்டிகள் - 2 (பூச்சி நீக்கப்பட்டவை) விற்பனைக்குண்டு. தொடர்பு: தலங்காவல் பிள்ளையார் கோயில் முன்பாக, றோசாத் தோட்டம், திருநெல்வேலி மேற்கு. [49197]

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதி, மக்கிக் கிடங்கடி பழைய பார்( BAR) இரண்டறைகளுடன், கடைக்கட்டடமும், நிலப்பரப்பு ஒன்றும் குளி 2.68ம் பயிர்வகைகளும், உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: L. மோகன் மாஸ்டர், சங்கரப்பிள்ளை வீதி, மக்கிக்கிடங்கடி, ஆனைக் கோட்டை. [49136]

# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 25 நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி, ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா தினமும் மாலை 5.15 மணிக்கு நிகழ்த்திவரும் 'கந்த புராணம்' தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று 'வீரவாகு தேவர் தூது' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

(ஐ-5-30)

## யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

# வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் 16 வருடங்கள் நற்பணியாற்றிய ஆசிரியை

## திருமதி உமாபதிதேவி செல்லத்துரை

அவர்கள் 21 - 08 - 1997 ஆம் திகதி தம் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவரின் எதிர்கால வாழ்வு வளமுடன் அமைய வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன் புரிச்சங்கம்,

**யா\ மல்லாகம் மகா வித்தியாலயம்.**

(49204)

# 45ஆம் நாள் நினைவலைகள்



ஆண்டவன் படைப்பில்:

**27 -- 10 -- 1976**

காலனவன் அழிப்பில்:

**12 -- 07 -- 1997**

## சச்சிதானந்தசிவம் சிவகுமார்

(வேலணை)

அன்பின் உறைவிடமே சிவா!
நீ எங்கேயடா போனாய்?
உந்தன் அன்புக்காய் தவம்
கிடக்கும் எங்களை விட்டு விட்டு
பாதை ஒன்று திறந்தால்
பறந்தோடி வருவேன் என்ற
உந்தன் மடல் கண்டு
பாதையையே பார்த்திருக்கின்றோம்.

சிவாவின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்ற:

உறவினர், நண்பர்கள்.

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(48962)

## யாழ். மறை மாவட்ட

# கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

## வடமராட்சிக் கிளை - 06

மேற்படி கிளை **23 - 08 - 1997** இல் நடத்திய அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற அதிர்ஷ்ட எண்கள் வருமாறு-

**1 ஆம் பரிசு - 1036**
**2 ஆம் பரிசு - 4413**
**3 ஆம் பரிசு - 0157**

ஆறுதற் பரிசிற்குரிய எண்கள்:

(1) **2395** (2) **2295** (3) **3898**
(4) **4863** (5) **1585** (6) **1582**
(7) **4279** (8) **0117** (9) **3335**
(10) **2915**

அதிர்ஷ்ட எண் சீட்டையும், அடையாளத்தையும் உறுதிப்படுத்தி, கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயப் பங்கு மனையில் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**ம. பீற்றர் ஜெயசீலன்,**
செயலாளர்.

(49202)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

# விரிவுரை மண்டபக் கதிரைகளை வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மரத்தாலான விரிவுரை மண்டபக் கதிரைகள் 350 வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1) கேள்விப்பத்திரதாரர் யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் வழங்கலுடன் தொடர்பு கொண்டு படவரைவைப் பெற்றுக் கொள்ளலாம்.

2) கேள்விப்பத்திரதாரர் மீளளிக்காத வைப்புப் பணமாக 250ரூபாவும் மீளளிக்கும் வைப்புப் பணமாக 750 ரூபாவும் பணமாக நிதிப்பகுதியில் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன்கேள்விப்பத்திரங்களை 10-09-97ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் நிதியாளரது அறையில் உள்ள கேள்விப் பத்திரப்பெட்டியில் தபால்மூலமாகவோ, நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

3) கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் காலை10.30மணிக்கு திறக்கப்படும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் UJ/PO/04/97 எனக்குறிப்பிடல் வேண்டும்.

**- பதிவாளர்**

நிதிக்கிளை,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
20 - 08 - 97

(சி/1367)

# தேகவியோக நாள் - கண்ணீர் அஞ்சலி



மறைவு; **22 08 1997**

## திருமதி மகேஸ்வரி செல்லையா

அண்ணா கண்விழிக்கேன் அவர்மறைந்த துயரதனால்
அணு அணுவாகவே அல்பகலாய்த் துடிக்கிற நான்
எண்ணிய நான் ஒரெட்டில் எனதன்பு அருமையக்கா
என்விழிக்காய் மறைந்த செய்தி என்செவியில்
அனற்பிழம்பே
ஒருங்கிருந்து உறவுகொள்ள உமையங்கு அழைத்த
அண்ணா
உயிர்மறைந்த துயரதனை ஒருசிறிதும் ஆற்றலின்றி
மருங்கிருக்க அவாவுற்று அவர்புகுந்த பொன்னுலகம்
மாற்றமொன்றும் உரையாய் மறைந்தாயேல்
எதுமறக்கேன்.

அன்னை மடியில்; **03 -- 11 -- 1940**



இறைவன் அடியில்: **15 -- 08 -- 1997**

## அமரர் கந்தையா சண்முகம்

மட்டக்களப்பு
(ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்,
சமாதான நீதிவான்)

ஒருகொடியில் பிறந்தோமே
ஒருமடியில் வளர்ந்தோமே
ஒருமனதாய் இருந்தோமே
ஈருடலாய் இருந்தாலும்
இன்னுறவை கண்டோமே
இனிய என் சகோதரனே
ஈரிடமாய் வாழ்ந்ததனால்
இறுதியிலும் சேரவழியில்லை
உன்முகத்தை காணத்தான் முடியவில்லை
என்ன சொல்லியான் அழுவேன்.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இதயத்தால் அஞ்சலித்து நிற்கின்றோம்.

உங்கள் மறைவால் துயரில் மூழ்கும்:

**அருமைத் தம்பியார் க. பொன்னையா.**

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(சி/1373)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சட்டத்துறையில் அரசுக்கு ஆலோசனை கூறுபவர் யார்?

## கூரே விடுதலை எழுப்பும் கேள்வி

கொழும்பு, ஓக. 25

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட ஐ. தே.கவின் முன்னாள் செயலாளர் சிறிசேன கூரே உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதை அடுத்து அரசுக்கு சட்டத்துறை தொடர்பான ஆலோசனைகளை யார் வழங்குகிறார்கள் என்ற கேள்வி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் எழுந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் அரசாங்கம் எடுத்த சில நடவடிக்கைகள் அரசாங்கத்தையே திருப்பித் தாக்கி தேசிய, சர்வதேச மட்டத்தில் அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளன என்றும்---

அரசாங்கம் மேற்கொண்ட இந்த நடவடிக்கைகள் யாவும் சட்ட ஆலோசனை பெறப்பட்ட பின்னரே மேற்கொள்ளப் பட்டன என்றும்--- தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாநகர முதல்வரை அகற்றுவதில் ஆரம்பித்து வடமத்திய, சப்பிரகமுவ மாகாண சபைகளைக் கலைத்தது, ரி. என். எல் ஒளிபரப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி இஷானி விக்கிரமசிங்காவைக் கைது செய்தது, தற்போது சிறிசேன கூரேயைக் கைது செய்தது ஆகிய அனைத்தும் சட்ட விரோதமான நடவடிக்கைகள் என நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

(இ-10)

# யாழ். வரும் புங்குடுதீவு வாசிகள் குடி நீருடன் திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், ஓக. 25

பல்வேறு தேவைகளின் நிமித்தம் புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணம் வரும் தீவுப்பகுதி மக்கள் பலர் திரும்பிச் செல்லும்போது இங்கிருந்து தண்ணீர் பரல்களில் குடிதண்ணீர் எடுத்துச் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

புங்குடுதீவுப்பகுதியில் தற்போது நிலவும் குடிதண்ணீர் பற்றாக்குறையே இதற்கான காரணமாகும்.

புங்குடுதீவுக்கு குடிதண்ணீர்வழங்குவதற்கென முன்னர் வழங்கப்பட்ட தண்ணீர் பவுஸர் தற்போது வேலணைப் பகுதியிலேயே சேவையில் ஈடுபட்டிருப்பதால் புங்குடுதீவில் குடி தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக அப்பகுதிமக்கள் தெரிவித்நனர்.

(ஐ-15)

# சட்ட விரோத மீன்பிடியைத் தடுக்க விரைவில் சமுத்திரப் படைப் பிரிவு

கொழும்பு, ஒகஸ்ட் 25

இலங்கைக் கடற்பரப்பில் வெளிநாட்டவர்கள் சட்ட விரோதமாக மீன் பிடிப்பதைத் தடுப்பதற்கும், பவளப் பார்களை வெட்டி எடுப்போரைக் கைது செய்வதற்காகவும் விரைவில் ''சமுத்திரப் படை' என்றபுதிய படைப்பிரிவு அமைக்கப்படவுள்ளது.

இத் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தச் சமுத்திரப் படை அடுத்த வருடம் முதல் செயற்படும் எனவும், இந்தப் படைக்கு முதலில் 100 பேர் சேர்க்கப்பட்டு அவர்களுககுத் தேவையான கடற்கலங்கள் வழங்கப்படும் எனவும் மீன்பிடி, கடல்வளத் துறை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன் பிடிப்பதும் பவளப்பார்கள் உடைத் தெடுப்பதும் நாளாந்தம் அதிகரித்து வருவதால் இவ்வாறு சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்கு ஒரு படையை ஈடுபடுத்தும் தேவை உருவாகியுள்ளதாலேயே இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ - 10)

## பண்டத்தரிப்பு சந்தை

ஆறு வருட இடை வெளிக்குப் பின்னர் பண்டத்தரிப்பு சந்தை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

மரக்கறி வியாபாரிகள் சிலரும், மீன் வியாபாரிகள் சிலரும் இங்கு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

இதேவேளை இச் சந்தையின் கட்டட கூரை சீற்றுகளும், மரங்களும் ஏற்கனவே அபகரிக்கப்பட்டுள்ளதால் வியாபாரிகளும், பொருள்களை வாங்க வரும் பாவனையாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இச் சந்தையை புனரமைப்புச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பண்டத்தரிப்பு கிராமஅபிவிருத்தி சங்கத் தலைவர் ஏ.வி. துரையப்பா வலி. தென் மேற்கு பிரதேச சபை தலைமைச் செயலகத்தின் விசேடஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-135)

## சென்றல் முகாம் சம்பவம்:

# மட்டக்களப்பு எம். பிக்கு நீதிமன்றம் அழைப்பாணை

மட்டக்களப்பு, ஓக. 25

அம்பாறை சென்றல்முகாம் வாசியான குடும்பப் பெண் முருகுப்பிள்ளை கோணேஸ்வரியின் மரணம் தொடர்பாக இம்மாதம் 26ஆம் திகதி கல்முனை நீதிவான் அன்ரன் பாலசிங்கம் விசேட விசாரணை மேற்கொள்ளவுள்ளார்

கடந்த மே மாதம் 17ஆம் திகதி இப்பெண் கிரனைட் வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் இந்தப் பெண் அகப்பட்டு பலியானார் எனப் பொலீஸார் தெரிவித்திருந்தனர்.

பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே இந்தப் பெண் கிரனைட் வீசிக் கொல்லப்பட்டார் என மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோசெப்பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு முறையிட்டிருந்தார்.

அதையடுத்து குற்றத் தடுப்பு இணையத்தைச் சேர்ந்த உதவி பொலீஸ் அத்தியட்சகர் எம். ஜே. சதியன் தலைமையிலான விசேட பொலீஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தது.

இந்தச் சம்பவம் குறித்து ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியானது,

இம்மாதம் 26ஆம் திகதியன்று கல்முனை நீதிமன்றத்தில் நடைபெறவுள்ள விசாரணைக்குச் சமுகமளிக்குமாறு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோசெப் பரராஜசிங்கத்துடன் சண்டேரைம்ஸ் பத்திரிகையின் உதவி ஆசிரியர் எஸ்.எஸ். செல்வநாயகத்துக்கும் நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ -10-2)

## மிதிவெடியில் கால் இழப்பு

தோட்ட வேலைக்காகச் சென்றவர் பாதைமாறிச் சென்றதால் மிதிவெடியில் சிக்குண்டு வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கந்தையா செல்வரத்தினம் (வயது 37) என்பவரே காலை இழந்தவர் ஆவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 25

வல்வெட்டி சமரபாகு அறவழிப்பாலர்பாடசாலைமெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அறவழி நிதித்துறை இயக்குநர் கா. செல்லையா தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டிக்கு சமரபகு கிராமசேவையாளர் சு. செல்வநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ-15)

# சமய, சமூகப் பணிகளை மேம்படுத்த நல்லூர்" துர்க்கா சிறுகுடில்" உதவும்

## குடிபுகுவிழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தகவல்

நல்லூர் ஓக. 25

'எமக்குக் கிடைக்கும் பணத்தை நல்ல முறையில் அறப்பணிகளுக்காக, சமூக மேம்பாட்டுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதே எமது கொள்கை. அதன் அடையாளமாகவே ''துர்க்கா சிறுகுடில்''நல்லூரில் திறந்து வைக்கப்படுகிறது. எமது சமய சமூகத் தொண்டுகளில் ''துர்க்கா சிறுகுடில்' முக்கிய பங்காற்றும்''.

நல்லூர் கந்தசுவாமிமேற்கு வீதியில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான நிர்வாகத்தினால் அமைக்கப்பட்ட ''துர்க்கை சிறுகுடில்'' குடிபுகுதல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை சுப வேளையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் பேசும் போதே சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

குடிபுகுதல் நிகழ்வில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், சமயப் பெரியார் ஏழாலை பண்டிதர் மு. கந்தையா உட்பட சமய, சமூகப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சிவத்தமிழ்ச் செல்வி தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

யாழ்ப்பாணத்தில் பலரிடம் பண வசதி உண்டு. அதனைத் தர்மவழியில் செலவு செய்யாது வீண் செலவு செய்து திண்டாடுகிறார்கள். கடந்தபன்னிரெண்டு வருடங்களாக எமது தேவஸ்தான நிர்வாகத்தினர் வசதி குறைந்த, ஆதரவற்ற பிள்ளைகளை அன்புடன் அரவணைத்து வளர்த்துக் கல்வி அறிவூட்டி வருகின்றனர். தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான அரவணைப்பில் உள்ள பிள்ளைகளில் மூவர் இன்று பல்கலைக் கழகத்தில் கல்வி பயில்கிறார்கள் என்பது எமக்குப் பெருமையே.

துர்க்கை அம்மன் ஆலய அறங்காவல் சபை மூலம் புற்றுநோய், சிறுநீரக வியாதிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கியுள்ளோம்..

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானம் ஏழைகள், அகதிகள், நோயாளர்கள் என்று பலதரப்பட்ட மக்களுக்கும் உதவுவதால் அதனுடைய சமூகப்பணி விரிவடைய வேண்டும் என்ற நல்ல நோக்குடன் பலர் முடிந்தவரை உதவுகிறார்கள். எமது சமூகப் பணி மேன்மேலும் விரிவடைய வேண்டும் என்பதற்காக இந்த இடத்தைத் தந்த திருமதி அரியகுட்டி அம்மையாரது உயர்ந்த மனதைப் பாராட்டுகின்றோம்.

இந்த இடத்தில் கூட்டு வழிபாடு, சமயக் கூட்டங்கள், விழாக்களுக்கான மண்டபம் ஒன்றும் அமைக்கப்படும் —என்றார்.

### முன்னுதாரணம்

திரு. ஆறு. திருமுருகன் பேசும் போது கூறியதாவது:

இங்கு பல ஆலயங்கள் இருப்பினும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர்கள் ஆற்றும் சமூகப்பணி உயர்ந்த இடத்தில் இருக்கிறது.

எமது தேவஸ்தானத்தின் பணிகளைத் தெரிந்து கொண்டு இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள பல அமைப்புக்கள் அதன் அடிப்படையில் தொண்டாற்ற முன் வந்துள்ளன. அத்தோடு துர்க்கை அம்மன் ஆலயத்தின் உதவியுடன் வெளியிடங்களிலிருந்தும் தமது பணிகளுக்கான உதவிகளைப் பெற்று வருகின்றனர். திருகோணமலையில் உள்ள அன்பு இல்லத்தை நடத்தும் பெரியார் தமது தொண்டுக்கெல்லாம் துர்க்கை அம்மன் அருள் தான் காரணம் என்றார்.

கொழும்பு இந்து மா மன்றம் போன்ற அமைப்புக்களும் துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தினைப் பின்பற்றி சமய சமூகப் பணிகளைச் செய்கின்றன. மலையக மக்கள் கூட அம்மாவின் சேவை தேவை எனக் கூறுகிறார்கள்.

இங்கே பணம் அனுப்பினால் நிறைவிலான பணி கிடைக்கும் என்று எல்லோருமே மகிழ்வடைகிறார்கள்.

தமிழ் கூறும் நல்லுலகம் பெருமைப்படக் கூடிய அறப்பணி நிலையமாக நல்லூர் ஆலயச் சூழலில் தெய்வீகப் பணியாற்றும் வகையில் அமையப் போகும் மண்டபம், சைவத்தின் தொன்மைகளை எடுத்துக் கூறுவதுடன் அடக்கமான, அமைதியான, தெய்வீகமான மண்டபமாக அமைய வேண்டும் என கற்ற சமுதாயம்- பெரியார்கள்- வாழ்த்துகிறார்கள். அவர்களின் விருப்பம் நிறைவேற இறையருள் கிடைக்கும் என்று நம்புகிறோம்- என்று கூறினார்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பக்திப் பாடல்களும் காரை. எம். பி. அரு[illegible]

(அ-103)

# 2 எம். பிக்களும் நாடாளுமன்றில் தனித்துச் செயற்பட முடிவு

கொழும்பு, ஓக. 25

நாடாளுமன்றத்தில் தனித்து செயற்படவும் --

அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவாக தற்காலிகமாக வாக்களிக்கவும் --முடிவு செய்துள்ளதாக ஈ. பி. டி. பி அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்தனர்.

நீதிமன்றம் அளித்த தீர்ப்பையடுத்து அவர்கள் கடந்தவெள்ளியன்றுகொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

ஆர். இராமேஸ்வரனும், ஆர். இராமமூர்த்தியும் இந்த மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த சில நாள்களில் ஜனாதிபதியுடன் சந்தித்த பின்னர் எமது எதிர்கால்ம் குறித்து முடிவு செய்வோம்.

அரசு முன்வைத்துள்ள உள்ளடக்கத்தில் சாதகமான, பாதகமான விடயங்கள் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அந்த யோசனைகளை முழுமையாக ஆராய்ந்த பின்னரே அது தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவோம்.

இனப்பிரச்சினை விடயத்தில் ஜனாதிபதி நம்பிக்கையுடன் செயற்படுகின்றார். ஆனால் அவர் வெற்றி பெறுவாரா என்பது தான் கேள்வி.

சர்வஜன வாக்கெடுப்பு, மூன்றில் இரண்டு பெரும்பான்மை, விடுதலைப் புலிகள் தீர்வு யோசனையை ஏற்காத நிலை ஆகியன இத்தீர்வு யோசனைகளுக்குப் பாரிய தடையாக உள்ளன. இவற்றை எல்லாம் நீக்கி வெற்றி பெறவேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வை விடுதலைப் புலிகள் உட்பட சகல தரப்புக்களும் ஏற்க வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேசி பொருத்தமானதீர்வைக் காண்பதே இன்றைய தேவை ஆகும். --

இப்படி அவர்கள் தெரிவித்தனர். (இ-21-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். தொண்டர் ஆசிரியர் விவரம் ஜனாதிபதி செயலகம் கோருகிறது

அச்சுவேலி, ஓக. 25

யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களின் விவரங்களை ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது.

தொண்டர் ஆசிரியர் சங்கத்திற்கு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் ஒன்றில் தொண்டர் ஆசிரியர்களின் சேவை மற்றும் விவரங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்கள் நீண்டகாலமாக கடமையாற்றிய போதிலும் அவர்களது நியமனம் தொடர்பாக இழுத்தடிப்பதாவும் நீதி வழங்குமாறும் கோரி யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியிருந்தது.

மேற்படி முறைப்பாடு தொடர்பாக ஜனாதிபதிசெயலகம் யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள பதிலில் தொண்டர் ஆசிரியர்களின் சேவை மற்றும் விவரங்கள் அடங்கிய விவரப்பட்டியலை உடனடியாகசமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளது.

மேற்படி கடிதத்தின் பிரதிகள் வடக்கு -கிழக்குமாகாண அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் சுமார்இரண்டாயிரம் தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றுவதாகவும் இதில் 10 வருடங்களிற்கு மேற்பட்டசேவை உடையவர்கள் கணிசமான தொகையினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-11)

## கால்நடை உரிமையாளரிடம் பணம் அறவிடும் திருடர்!

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் இரவு நேர ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. சாதாரண பொது மக்களை அது பொழுது கவியும் போதே வீட்டுக்குள் முடங்கச் செய்கிறது.

ஆயின் பலவகைத் திருடர்களுக்கும் அவர்களது ''தொழிலுக்கு'' அது எவ்விதத்திலும் முட்டுக்கட்டையாக இருப்பதில்லை; மிகப் பெரிய அளவில் உதவுகிறது.

ஊரடங்கைப் பயன்படுத்தி இரவு நேரத் திருட்டில் ஈடுபடுவோரில் கால்நடைத் திருடர்களும் அடங்குவர்.

கிராமப் பகுதிகள், நகரப்பகுதி என்று எதனையுமே விட்டு வைக்காமல் அவர்கள் தமது ''தொழிலை'' லாபகரமாக நடத்தி வருகிறார்கள்.

இணுவில் பகுதியில் கால்நடைகள் அடிக்கடி திருடப்படுவதாக அறிய வந்துள்ளது. அங்கு புதுவகைத் திருட்டு.

திருட்டுப் போன கால்நடைகளை உரிமையாளர்கள் கண்டுபிடித்தாலும் கூட, பணம் அறவிட்டுக் கொண்டே திருடர்கள் அவற்றைத் திருப்பிக் கொடுக்கின்றனர்.

விவசாயி ஒருவரின் சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு ஒன்றும், கன்று ஒன்றும் அதிகாலை வேளை திருடப்பட்டது. அந்த விவசாயி தேடிச் சென்ற போது தாவடி மயானத்துக்கு அண்மையில் மாடும், கன்றும் நிற்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் திருடியவர் பேசிய பேரத்துக்கு இணங்க அந்த விவசாயி 500 ரூபா செலுத்தி விட்டே மாட்டையும், கன்றையும் கொண்டு செல்ல நேர்ந்தது-

இணுவிலில் மற்றொரு சம்பவத்தில் சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதியான ஆட்டுக்கடா ஒன்று திருடப்பட்டது. பின்னர் அந்த ஆடு ஆனைக்கோட்டையில் நிற்பது கண்டுபிடிக்கப்பட்டது. இங்கும் ஆட்டைத் திருடியவர் கேட்ட ஆயிரம் ரூபாவை செலுத்திவிட்டே உரிமையாளர் அதனைக் கொண்டு செல்ல முடிந்தது.

மடத்தில் திருட்டு

இதேவேளை, நகரில், கந்தர்மடத்தில் உள்ள வேதாந்த மடத்தில் வளர்க்கப்பட்ட இரண்டு பசுக்களும், ஒரு கன்றும் புதன்கிழமை இரவு திருடப்பட்டு விட்டன.

பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இந்தக் கால்நடைகளைத் திருடியவர்களும், முந்திய வகையினராக இருக்குமோ யாருக்குத் தெரியும்!

(அ-5)

## இதுவரை 25 டாக்டர்கள் இங்கு கடமைக்கு வந்தனர்

திருநெல்வேலி, ஓக. 25

கடந்த வாரம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த 9 டாக்டர்களில் 3 டாக்டர்கள் பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 6 பேரில் சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலைக்கு ஒரு டாக்டரும், யாழ். மாநகர பாடசாலை வைத்திய அதிகாரியாக (S. M. O) ஒரு டாக்டரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ். அரசினர் போதனாவைத்திய சாலையில் இவர்களில் 4 டாக்டர்கள் கடமையாற்றுவர்.

யாழ். சுகாதார பிராந்தியத்தில் பணியாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த 33 டாக்டர்களில் 25 டாக்டர்கள் இதுவரை இங்கு வந்து கடமையைப் பொறுப்பேற்றிருப்பதாக யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே. ரி. சிவபாதம் தெரிவித்தார்.

நியமனம் செய்யப்பட்டவர்களில் மேலும் மூன்று டாக்டர்கள் தங்கள் கடமையைப் பொறுப்பேற்க விரைவில் இங்கு வருவர் என்று எதிர் பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-135)

## செஞ்சிலுவை கருத்தரங்கு

தென்மராட்சி, ஓக. 25

பளை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோருக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் சங்கத்தின் கொள்கைகள், செயற்பாடுகள், சேவைகள் பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளது.

(ஐ-117)

## மீண்டும் பழைய இடத்தில் பாடசாலை

குருநகர், ஓக. 25

கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் பாடசாலையுடன் இணைக்கப்பட்டு இயங்கி வந்த ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் அதன் பழைய இடத்தில் மீண்டும் இயங்க உள்ளது.

ஆரம்ப நிகழ்வில் வலயம்-1 கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். பாடசாலையின் புதிய அதிபராக அருட் சகோதரி சில்... பொறுப்பேற்கவுள்ளார்.

(ஐ-51)

## சுகாதார பரிசோதகர் பற்றாக்குறை

திருநெல்வேலி, ஓக. 25

எட்டு பொது சுகாதார பரிசோதகர்கள் கடமையாற்ற வேண்டிய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தற்போது ஒருவர் மட்டுமே கடமையாற்றி வருகின்றார். இவர் தமது வழமையான பணியுடன்இப்பிரிவுசுகாதாரவைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றி வருகின்றார்-என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-135)

## வெற்றிலை விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ். நகரில் வெற்றிலையின் விலை பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன் 10 ரூபா தொடக்கம் 12 ரூபா வரை வெற்றிலை விற்பனையாகியது.

தற்போது வெற்றிலை 1 ரூபா 75 சதமாக விற்பனையாகிறது.

(இ-15)

## ஓய்வூதியர் சங்கம்

சண்டிலிப்பாய், ஓகஸ்ட் 25

பண்டத்தரிப்பு ஓய்வூதியர் நலன் புரி ஐக்கிய கூட்டுறச் சங்கம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது. சங்க அங்கத்தவர்களான ஓய்வூதியர்களுக்கு 3 ஆயிரம் ரூபா வரையிலான கடன் வழங்கும் திட்டம், இறப்பவர்களுக்கு மரண சகாயக் கொடுப்பனவு வழங்கும் திட்டம் என்பன செயற்படுத்தப்பட்டு வருவதாக மேற்படி சங்க செயலாளர் ஏ. வி. துரையப்பா தெரிவித்தார்.

(ஐ-135)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாத நோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாத விடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம்குறுக்குத்தெரு,


## பருத்தித்துறையில் விரைவில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக. 25

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை ஆயிரத்து 372 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன.

இவர்களுக்கான மீளக்குடியமர்தல் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளது.

மீளக்குடியமர்தலுக்கான படிவங்கள் வழங்கப்பட்டு கொடுப்பனவு வழங்குவதற்கான வேலைகள் முடிவடைந்துள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் நா. மகேந்திரன் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு விநியோகம் சீராக நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-15)

## முன் பள்ளி ஆசிரியர்களுக்கு அழைப்பு

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தத்தம் சுய விவரங்களுடன் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்துக்கு சமுகமளிக்குமாறு சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் அறிவித்துள்ளார்.

(ஐ - 51)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04 -- 06 -- 1920 | 12 -- 07 -- 1997 |

**திருமதி சரஸ்வதி சோமசுந்தரம்**


(உரும்பிராய் கிழக்கு)

அன்னைக்கு அன்னையே! அன்பின் திருவுருவே!
பாசத்தின் தன்மை காட்டி பண்பின் பெருமை சொல்லி
உறவென்றால் இதுவென்று உடனிருந்து காட்டினீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(சி - 1383)

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 16 -- 01 -- 1942 | 26 -- 07 -- 1997 |

**அமரர் சின்னத்தம்பி சந்திரன்**

(கூட்டுறவுப் பரிசோதகர்)

எங்கள் குடும்பத் தலைவரின் திடீர் மறைவை முன்னிட்டு நேரிலும், கடித மூலமும் அனுதாபம் தெரிவித்தோர், மலரஞ்சலி செலுத்தியோர், கண்ணீரஞ்சலிகளைப் பிரசுரித்த பொது, கூட்டுறவு, நலன்புரி அமைப்புகள் மற்றும் பலவகையிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

பிள்ளையார் கோயிலடி,
மூளாய், சுழிபுரம்.

(49205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கவனத்தில் எடுக்க வேண்டும்

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்கள் இவ்வாரம் யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

எதிர்வரும் புதன், வியாழக் கிழமைகளில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல தரப்பட்டவர்களைச் சந்தித்து விவரங்களைச் சேகரிக்க உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

கடந்த வாரம் சர்வதேச மன்னிப்புச் சபையின் இரு பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்து போனார்கள். அவர்கள் போன கையோடு — ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்களின் வருகை தற்போது இடம்பெறுகிறது.

வடபகுதிக்கு மனித உரிமைகள் பேணும் குழுக்கள் வருவதற்கு அரசாங்கம் நீண்ட காலமாகத் தடை விதித்து வந்தது.

1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மனித உரிமைக் குழுக்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதிக்கப்பட்டதாக தெரியவில்லை.

ஒரு கட்டத்தில் கொழும்பில் இருந்தோ அல்லது வெளிநாட்டில் இருந்தோ பத்திரிகையாளர்கள் கூட யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

தற்பொழுது இரு மனித உரிமைக் குழுக்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. இது குறித்து அரசியல் வட்டாரங்களில் பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

அரசாங்கம் தற்பொழுது ஒரே சமயத்தில் மூன்று நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதாக நம்பப்படுகிறது.

ஒன்று விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவது. ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை மூலம் இதனைச் சாதிக்கலாம் என்று அரசாங்கம் கருதுகிறது ஆனால் இதுவரை எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

இரண்டாவது சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தும் முயற்சி. வெளிநாடுகளில் மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் மூலம் இதனை எட்டலாம் என்று அரசாங்கம் கருதுகிறது. இந்த பிரசாரங்கள் மூலம் முன்னைய காலங்களை விட ஓரளவு சாதகமான சூழ்நிலை உருவாகியிருப்பதாக அரசாங்கம் கருதுகிறது.

மூன்றாவது மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடுவது.

அரசாங்கம் வெளிநாடுகளில் தற்பொழுது எதிர்நோக்கிவரும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் ஆகும்

தற்பொழுது மனித உரிமை மீறல்கள் பேணப்படுவதாக அரசாங்கம் வெளிநாடுகளில் பிரசாரம் செய்து வருகிறது.

தனது பிரசாரங்களுக்கு வலுவூட்டும் விதத்திலேயே சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் யாழ்ப்பாணம் வர அரசு அனுமதி அளித்திருக்கிறது.

இந்தக் குழுக்கள் யாழ்ப்பாணம் வர அரசாங்கம் அனுமதி அளித்திருப்பதன் மூலம் அரசாங்கம் ஒன்றை எதிர்பார்ப்பது நிச்சயம்.

அதாவது யாழ். குடாநாட்டில் மனித உரிமைகள் பேணப்படுவதாக அந்தக் குழுக்கள் தமது அறிக்கையில் தெரிவிக்கும் என்பதே அதுவாகும்.

இதனை எதிர்பார்த்தே இக்குழுக்கள் யாழ்ப்பாணம் வர அரசு அனுமதி அளித்திருக்கலாம் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் ஒன்றை இக்குழுக்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். விவரங்களை முழுமையாகத் திரட்ட முடிந்ததா? அதற்கான சூழ்நிலை இருந்ததா? என்பதை.

# ஐ. நா. உதவித் திட்டத்தின் கீழ் வடமராட்சி மீனவருக்கு வலைகள்

யாழ்ப்பாணம், ஒக. 25

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நுண் கருத்திட்ட உதவியின் கீழ் மூன்று திட்டங்கள் விரைவில் செயற்படுத்தப்பட உள்ளன.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற நுண்கருத்திட்டம் சம்பந்தமான கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதல் இரண்டு திட்டங்களும் வருமான ஈட்டத்தின் கீழ் கரையோர கடற்றொழிலாளர்க்கு வலை மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வழங்குவதாகும்.

தொண்டமானாறுதொடக்கம் பருத்தித்துறை கற்கோவளம் வரையிலான - வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை ஆகிய இருபிரிவுகளிலும் அடங்கும் கரையோரப்பகுதி கடற்றொழிலாளர்கள் இத் திட்டத்தின் மூலம் நன்மையடைவர்.

இந்த இரு திட்டங்களுக்கும் தலா 5 இலட்சம் ரூபா வீதம் 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இப் பிரிவிலுள்ள நான்கு பாலர் பாடசாலைகளைத் திருத்தியமைத்து அவற்றிற்குத் தளபாட வசதிகளை வழங்குவது மூன்றாவது திட்டமாகும்.

5 இலட்சம் ரூபா நிதிக்கு உட்பட்ட இத் திட்டத்தின் கீழ், தொண்டமானாறு கலைவாணி பாலர் பாடசாலை, பொலிகண்டி தெற்கு பாரதி சனசமூக நிலையப் பாலர் பாடசாலை, அல்வாய் வடக்கு நக்கீரன் பாலர் பாடசாலை குரும்பகட்டி பாலர் பாடசாலை ஆகிய பாலர் பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகள் வெகு விரைவில் நடைமுறைப் படுத்தப்படஉள்ளதாகப் பருத்தித்துறை திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-15)

## பத்ம பாதம் பணிந்திடுவோம்!

தொல்லை வினை தீர்க்கும் தோகைமயில் வாகனனே
இல்லை யெனாது வரமீந்தருள் புரிவாய் முருகா!
கல்லை யொத்த மனமும் கசிந்துருகக் காட்சி நல்கும்
நல்லைக்கந்தனே நின் பத்மபாதம் பணிந்திடுவோம்!

கந்தனைக் கைதொழுது காலால் திருவீதி வலம் வந்து
வந்தனை செய்தே வணங்கி வள்ளி மணாளன் நாமம்
சிந்தனை யிலிருத்தி யென்றும் சிங்கார வேலனே என்று
உந்தனை வழுத்துகின்றோம் உய்தியைத்
தருவாயையா!

முருகா முத்துக்குமரா வடிவேலா என்றே - நாம்
ஒருகால்நினைக்கின் நின்னிருகாலும் தோன்றும்!
கருவாய்க்கிடந்துன் கழலே பணிந்தோம் மால்
மருகா வாவா நம் மயக்கந் தீர்த்தருள்வாயையா!

- இராசையா ஸ்ரீதரன்

## கிருஷ்ண ஜெயந்தி

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு மகா விஷ்ணு ஆலய கிருஷ்ணஜெயந்தி விழாவும் அலங்கார உற்சவமும் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (இ-117)

## 28 ஆம் திகதியே பாடசாலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 25

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 28 ஆம் திகதியே மீண்டும் ஆரம்பமாகும் என்று யாழ். கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

இம் மாதம் 27 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டது.

தற்போது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடந்து கொண்டிருப்பதால் 28 ஆம் திகதியே பாடசாலைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக அடுத்து வரும் ஒரு சனிக்கிழமை பதில் பாடசாலை நாளாக நடத்தப்பட வேண்டும் என்று கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-5(

## நாளை

### ஆவணி 10

செவ்வாய்க்கிழமை
திதி : நவமி
நள்ளிரவு 12.25 வரை.
நட்சத்திரம் : ரோகிணி
பிற்பகல் 5.10 வரை.
சுபநேரம் : 10.35-12.05
ராகுகாலம்: 3.05-4.35
(இரவுக்கும் பகலுக்கும்
பழைய நேரப்படி)

# 4 கோட்டங்களின் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக. 25

யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை, தென்மராட்சி, பளை ஆகிய கோட்டங்களில் யுனெஸ்கோ நிறுவனம் அண்மையில் நடத்திய சித்திரம், கேலிச் சித்திரம், சுவரொட்டி ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவர்களின் விவரம் வருமாறு:-

### யாழ். கோட்டம்

சித்திரமும்
கேலிச்சித்திரமும்
கீழ்ப்பிரிவு :—

★ 1 ஆம் இடம் -வீ. எஸ். செல்வரட்ணம் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

★ 2 ஆம் இடம் - தா. செறினா (புனித ஜோண். பொஸ்கோ வித்.)

★ 3 ஆம் இடம் - ச. விதூசன் (புனித ஜோண். பொஸ்கோ வித்.)

மத்திய பிரிவு :—

★ 1 ஆம் இடம் - ஏ. ஹரிகஜன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

★ 2 ஆம் இடம் - இ. அபித்தா (வேம்படி மகளிர் கல்லூரி)

★ 3 ஆம் இடம் - வ. குணரஞ்சனி (வேம்படி மகளிர் கல்லூரி)

மேற்பிரிவு

★ 1 ஆம் இடம் - வே. சுமன்ராஜ் (புனித மரியாள் வித்தி.)

★ 2 ஆம் இடம் - என். நிலோஷன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

★ 3 ஆம் இடம் - சே. கலிஸ் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

சுவரொட்டிப் போட்டி
கீழ்ப்பிரிவு

★ 1 ஆம் இடம் - செ. யஸ்மின் சுகன்யா (திருக்குடும்ப கன்னியர்மடம்)

★ 2 ஆம்இடம் -ப. காயத்திரி (புனித ஜோண். பொஸ்கோ வித்.)

★ 3 ஆம் இடம் ச. பிரியங்கரி (புனித ஜோண். பொஸ்கோ வித்.)

மத்திய பிரிவு

★ 1 ஆம் இடம் [illegible] முறுதா (வேம்படி மகளிர் கல்லூரி)

★ 2 ஆம் இடம் - சி. பிரவீனா (திருக்குடும்ப கன்னியர்மடம்)

★ 3 ஆம் இடம் - ப. நிர்ஷாந்தினி (வேம்படிமகளிர் கல்லூரி)

மேற்பிரிவு

★ 1 ஆம் இடம் - அமலதாஸ் டொறின் மரியற் (திருக்குடும்ப கன்னியர் மடம்)

★ 2 ஆம் இடம் - ஏ. ஈ. எஸ். பற்றிக்ஸ் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

★ 3 ஆம் இடம் - அ. சசிதராக்குமாரி (திருக்குடும்ப கன்னியர் மடம்)

### வேலணை ஊர்காவற்றுறை கோட்டம்

சித்திரமும்,
கேலிச்சித்திரமும்
கீழ்ப்பிரிவு

★ 1ஆம் இடம் - ம. சர்மிளா (கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் ம. வித்தி.)

★ 2 ஆம் இடம்-அ. அருள் பிரதீபன் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி)

★ 3 ஆம் இடம் - வழங்கப்படவில்லை.

மத்தியபிரிவு

★ 1 ஆம் இடம் - வை. றெஜிராஜேஸ்வரன் (ஊர்காவற்றுறை புனித அந்தோ. கல்லூரி)

★ 2 ஆம் இடம் - வி. விலியா (நாரந்தனை றோ. க. ம.)

★ 3 ஆம் இடம் - செ. மேரிறாஜினி (கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் ம. வி.)

மேற்பிரிவு

★ 1 ஆம் இடம் - க. (டயானா கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்.)

★ 2 ஆம் இடம் - ம. மெடோன் (ஊர். புனித அந்தோனியார் கல்லூரி)

★3 ஆம்இடம்- அ. பிரபாகரன் ஊர். புனித அந்தோனியார் கல்லூரி)

சுவரொட்டிப்போட்டி
கீழ்ப்பிரிவு

★ 1 ஆம், 2ஆம், 3 ஆம் இடங்கள் வழங்கப்படவில்லை.

மத்தியபிரிவு

★ 1 ஆம் இடம் - யோ ஜெனிஸ்ரன் -(நாரந்தனை றோ.க.ம.)

★ 2 ஆம்இடம்-(வேலணை சேர். வை.து.ம.ம.வி.)

★ 3ஆம்இடம் - தா.குயின்ரனி -(ஊர்.புனித அந்தோனியார் கல்லூரி)

மேற்பிரிவு

★ 1 ஆம் இடம் - ம. மெடோன் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.)

★ 2 ஆம் இடம் - சி. நிஷாந்தினி (நாரந்தனை கணேச வித்தி.)

★ 3 ஆம் இடம் - வழங்கப்படவில்லை.

### நல்லூர்க் கோட்டம்

சித்திரமும்
கேலிச்சித்திரமும்
கீழ்ப்பிரிவு

★ 1ஆம் இடம் - பூ. பிரணவன் (இந்து. ஆரம்ப பாடசாலை)

★ 2ஆம் இடம் - கை. ராஜீவ் (திருநெல்வேலி றோ. க. த. க. பாடசாலை)

★ 3ஆம் இடம் - த. அஜந்தன் (இந்து. ஆரம்ப பாடசாலை)

மத்திய பிரிவு

★ 1ஆம் இடம் - த. தர்ஷிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

★ 2ஆம் இடம்-ம-விஷ்ணுகாந் (யாழ். இந்துக்கல்லூரி)

★ 3ஆம் இடம்-ம. பாமினி (கொக்குவில் இந்துக்கல்லூரி)

மேற்பிரிவு

★ 1ஆம் இடம்-வை. செந்தூரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

★ 2ஆம் இடம் - நி. ஜீவகாந்த் (கோண்டாவில் இந்து மகா வித்தி.)

★ 3ஆம் இடம் - ர. பிரகாஷ் (செங்குந்த இந்துக் கல்லூரி)

சுவரொட்டிப் போட்டி
கீழ்ப்பிரிவு

★ 1ஆம், 2 ஆம், 3ஆம் இடங்கள் வழங்கப்படவில்லை.

மத்திய பிரிவு

★ 1ஆம் இடம் - ச. கமலேஸ்வரி (கனகரட்ணம் ம. ம. வி.)

★ 2 ஆம் இடம் - செ. கௌசல்யா (நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பா.)

★ 3ஆம் இடம் - க. கஜனாத் (நல்லூர் ஸ்தான சி. சி. த. க.பா)

மேற்பிரிவு

★ 1ஆம் இடம் - ர. பிரகாஷ் (செங்குந்த இந்துக் கல்லூரி)

★ 2 ஆம் இடம் - ந. ரவிவர்மன் (கோண்டாவில் இந்து மகா வித்தி.)

★ 3ஆம் இடம் - இ. பிரசாந்தன் (நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பா.)

### தென்மராட்சி, பளைக் கோட்டம்

சுவரொட்டிப்போட்டிகள்
கீழ்ப்பிரிவு

★ 1 ஆம் இடம்-ஜெ. அருணோதயன் (சாவகச்சேரி றோ. க. த. ம.பாடசாலை)

★ 2 ஆம் 3 ஆம் இடங்கள் வழங்கப்படவில்லை.

மத்தியபிரிவு

★ 1 ஆம் இடம்- சோ. ஜெயசுதன் (உசன் மகாவித்தியாலயம்)

★ 2 ஆம் இடம்- த. அஜந்தா (நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை)

★ 3 ஆம் இடம் - த. தவமாலினி (நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை)

மேற்பிரிவு —

★ 1 ஆம் இடம் - இராஜகுலசிங்கம் யுகேதர் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

★ 2ஆம் இடம் - சி. கிருபராசா (பளை மத்திய கல்லூரி)

★ 3ஆம் இடம்- ச. சந்திரமோகன் (மட்டுவில் மகா வித்தியாலயம்)

### சித்திர, கேலிச்சித்திரப் போட்டி முடிவுகள்:-

கீழ்ப்பிரிவு

★ 1ஆம் இடம் - சிகில் றெமின்டஸ் (சாவகச்சேரி றோ. க. த பாடசாலை)

★ 2ஆம்இடம், 3ஆம்இடம் வழங்கப்படவில்லை.

மத்தியபிரிவு

★ 1ஆம் இடம் -க. ஜானகி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வித்தியாலயம்)

★ 2 ஆம் 3 ஆம் இடம் வழங்கப்படவில்லை.

மேற்பிரிவு

★ 1 ஆம் இடம் - இராஜகுலசிங்கம் யுகேதர் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

★ 2ஆம், 3ஆம் இடம் - வழங்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவிப் பணம்

வட்டுக்கோட்டை, ஓக. 25

வலி-மேற்கு பிரதேச செயலகப் பகுதியில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் விவரங்கள் சமூக சேவை உத்தியோகத்தரால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்படும் மீளாய்வுக்குச் சமுகம் கொடுக்காதவர்களுக்குரிய மாதாந்த உதவிப் பணம் நிறுத்தப்படும் என பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர்தெரிவித்தார்.

## சமய சந்நிதிகளில்

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தியை ஒட்டி இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு உறியடி உற்சவம் இடம்பெறும். ஆலயத்தில்தற்சமயம் நடைபெற்று வரும் வருடாந்த உற்சவத்தின் சப்பறத் திருவிழாவும் இன்று மாலை நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். ( ஐ-30 )

★ ★ ★

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் கோயில் வருடாந்த தேர்த் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து பிற்பகல் 4மணிக்கு உறியடி உற்சவமும், நாளை காலை ஸ்ரீரங்கநாதபாத பூசையும், தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. ( ஐ-30 )

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று திங்கள் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து பிற்பகல்ஒரு மணிஅளவில் உறியடி உற்சவமும் இடம்பெறும். நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும். ( ஐ-30 )

★ ★ ★

குருநகர் புனித ஆரோக்கிய நாதர் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டம் கடந்த வெள்ளியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தினமும் நடைபெற்றுவரும் மாலை ஆராதனைகளைத் தொடர்ந்து நாளை திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும், புதன்கிழமை திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ஐ-15)

★ ★ ★

பருத்தித்துறை, தும்பளை, நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளியின் 5 ஆயிரத்து 224 ஆம் ஜெயந்தி தினம் நாளை செவ்வாய்க்கிழமை, கிருஷ்ண பட்ச நவமிதிதியன்று பக்தி பரவசத்துடன் கொண்டாடப்படும்.

அன்று இரவு ''கிருஷ்ண அவதார நோக்கம்'' என்ற தலைப்பில் பட்டிமன்றமும். வில்லிசையும் நடைபெறும், நள்ளிரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 2 மணி வரை ஸ்ரீ பத்திரகாளி ஜெயந்தி விசேட அபிஷேகம், வசந்த மண்டபப்பூசை, அன்னையின் திருவீதி உலா என்பன நடைபெறும். (ஐ-15)

## தாக்குதல்

நேற்று முன்தினம் காலை 6-45 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெவந்தியால என்னும் இடத்தில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 படையினர் உயிரிழந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-164-3]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருளேஸ்வரி பொன்னுத்துரை

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த பொன்னுத்துரை அருளேஸ்வரி 23 – 08 - 97 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் கந்தையா தங்கச்சியம்மா அவர்களின் மூத்த புதல்வியும், க. பொன்னுத்துரை (இளைப்பாறிய ஆசிரியர் – சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், மகேந்திரராஜா, விஜேந்திரன் (இந்தியா), கமலேந்திரன், யோகேந்திரநாதன், சசீந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வினாயகலிங்கம் (கனடா), தருமலிங்கம் (கொழும்பு), இராஜேஸ்வரி, சம்புலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாரதா, பாலகௌரி, சுப்பிரமணியம், பத்மா ஆகியோரின் மைத்துனியும், திசேன், சரீஜா, ஜனனி, பிரகீசன், தபோசன், சஷ்ணவி, வம்சவி, தாரகா, தர்ணன், துவாரகா, கோகுல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24 – 08 – 97 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்பில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
க. பொன்னுத்துரை
(கணவன்)

இந்திரகிரி,
கோயிற்குடியிருப்பு,
சாவகச்சேரி.

(49208)

### சுந்தரம் நடேசன்

(முன்னைநாள் ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை)

(லண்டன்)

சுந்தரம் குணசேகரியம்மா தம்பதிகளின் புத்திரன் நடேசன் (முன்னைநாள் ஊழியர் யாழ். போதனா வைத்தியசாலை) அவர்கள் லண்டனில் 18-08-97 ஆம் திகதி திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வசந்தமலர், திருச்செல்வம் (பரந்தன் இரசாயனக் கொம்பனி லிமிட்டட்), ஞானச்செல்வம் (இந்தியா), வசந்தாதேவி, கிருபாகரன்(லெபனான்), கருணாகரன்(ரஜனிபோட்டோஸ்) கருணாநிதி (Office Equipents Ltd), உதயகுமார் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தியாகராசா, தம்பிமுத்து, புஸ்பலீலா (இந்தியா), சூரியகுமாரி, பிரபா (லெபனான்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளை புஸ்பராகவன் (கனடா), புஸ்பசீலன் (லண்டன்), சுரேஸ் (லண்டன்) நகுலராஜன் (சுவீடன்) ஆகியோர் 26-08-97 செவ்வாய்க்கிழமை லண்டனில் நடத்துகின்றார்கள் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ. சுந்தரம்
(தந்தை)
446, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

''125 Sudbury''
Heights Avenue,
Green Ford,
Middle Sex,
-UB-6, O, N. F.
London

(49198)

## தேவை

ஸ்வீட்ஸ் மேக்கர்

(Sweets Maker) தேவை. அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

லிங்கம்
கிறீம் ஹவுஸ்,
75 / 17 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(49194)

முதன் முறையாக வீடியோ CD யை அறிமுகப்படுத்திய நாம் தற்போது சகல படங்களையும் வீடியோ C D யில் இருந்து நேரடியாகப் பதிவு செய்து தருகின்றோம்.

எமது வீடியோ C D வெளியீடுகளாவன:-

★ சூர்யவம்சம்
★ வி. ஐ. பி.
★ காதலி
★ உல்லாசம்

★ சிஷ்யா
★ இந்தியன்
★ தேவதை
★ கிழக்கு சீமையிலே
★ செம்பருத்தி
★ அண்ணாமலை

★ ராசி
★ வள்ளல்
★ மன்னவா
★ பாரதி கண்ணம்மா

★ குருதிப்புனல்
★ ஒன்ஸ்மோர்
★ நந்தினி
★ லவ்டுடே
★ அவ்வை சண்முகி
★ என் ஆசை மச்சான்

★ உள்ளத்தை அள்ளித்தா
★ தர்மதுரை
★ செந்தமிழ்பாட்டு
★ காலமெல்லாம் காதல் வாழ்க

★ ஸ்ரீ ராகவேந்திரர்
★ அக்னி நட்சத்திரம்
★ அலெக்ஸாண்டர்
★ எட்டுப்பட்டிராசா
★ நாயகன்
★ நாட்டாமை

விற்பனைக்குண்டு: Panasonic AV - 55 MIXER, Video C D க்கள், C D Playar கள்.

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மீண்டும் வெற்றி

கொழும்பு, ஓக. 25

இலங்கை -இந்திய அணிகளுக்கிடையில் நேற்று கொழும்பில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை அணி 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் இலங்கை அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 255 ஓட்டங்களைப் பெற்றது.

நடைபெற்ற இரு ஒரு நாள் போட்டிகளிலும் இலங்கை அணியே வெற்றி பெற்றிருந்தது. (3)

# இந்திய - பாகிஸ்தான் படைகள் காஷ்மீர் எல்லையில் மோதல்!

## இரு தரப்பிலும் 54 பேர் பலி!

புதுடில்லி, ஓக. 25

சர்ச்சைக்குரிய காஷ்மீர் எல்லையில் இந்திய படைகளுக்கும், பாகிஸ்தான் படைகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இரு தரப்பிலுமாக 54 பேர் நேற்றுக் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை ஆரம்பமான துப்பாக்கிச் சமரையடுத்து இந்திய இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தியதில் 51 பாகிஸ்தானிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று ஜம்முவில் இந்திய இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்திய தரப்பில் ஓர் இராணுவ மேஜர் உட்பட மூன்று படையினர் கொல்லப்பட்டனர் என்றும்–

6 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மோதல் தொடர்ந்து நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது. (முன் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்) )இ–3)

# அடுத்த மாதம் குடாநாட்டுக்கு 300 தொலைபேசி இணைப்புகள்

## அமைச்சர் சமரவீர தெரிவிப்பு

வவுனியா, ஓக. 25

யாழ்ப்பாணத்துக்கு அடுத்த மாதம் 300 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இப்படி தபால், தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர வவுனியாவில் தெரிவித்தார்.

வவுனியாவில் ஒலிபரப்பு நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்டுள்ள ''மெற்றோ றோலர்'' என்னும் இயந்திரம் மூலம் இந்த இணைப்பு வழங்கப்படவிருப்பதாகவும் –

அடுத்த கட்டமாக 2 ஆயிரம் இணைப்புக்கள் வழங்கப்படும் என்றும் – அவர் தெரிவித்தார். (இ-3-164)

## புலிகளினால்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கையின் படி கப்பலை ஓட்டிச் செல்வதா? அல்லது கட்டி இழுத்துச் செல்வதா? என்பது குறித்து முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கப்பலைப் பார்வையிட்ட வடகொரிய மாலுமிகளில் ஐவர் இடம்பெற்றிருந்தனர். (இ-150-3)

## திருமலை அகதி தீக்குளிப்பு பயமுறுத்தல்

''பசிக்கொடுமை தாங்கவில்லை; யாழ்ப்பாணத்துக்கு அனுப்புங்கள் இல்லையேல் உங்கள் அலுவலக வளவுக்குள் நாளை தீக்குளிக்கப் போகிறேன்.''

இப்படித் தெரிவிக்கும் அநாமதேயக் கடிதம் ஒன்று திருகோணமலை பிரதேச செயலர் வி. வேலும்மயிலுவுக்கு நேற்று மூன்தினம் கிடைத்தது.

கசங்கிய கொப்பி ஒற்றையில் எழுதப்பட்ட இக்கடிதத்தில் திகதியோ, பெயரோ எழுதப்படவில்லை.

இந்தக் கடிதம் கப்பல் வசதியின்றித் திருகோணமலையில் தங்கியுள்ள ஒருவரால் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## படையினர்...

[முதலாம் பக்கத் தொடர்]

வில்லை.

அதேநேரம்--புலிகள் ஏவிய ஷெல்களில் 2 ஷெல்கள் மட்டக்களப்பு நகரில் உள்ள புளொட் அலுவலகத்தில் வீழ்ந்து வெடித்ததில் 6 புளொட் உறுப்பினர்கள் காயமடைத்தனர்.

அவர்களது வாகனம் ஒன்றும் சேதமடைந்தது.

வெவர் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த படையினர் மீது வீழ்ந்த ஷெல்லினாலேயே இரு படையினர் இறந்ததாகப் பிந்திய செய்திகள் தெரிவித்தன.

கல்லடியிலும், நகரின் ஏனைய பகுதிகளிலும் வீழ்ந்த ஷெல்லினால் 20 பொதுமக்கள் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [இ-3-21]

## படையினர் பிடித்த...

(முதலாம் பக்கத் தொடர்)

பெரியமடு வரை நாங்கள் சென்றோம் பெரிய மடுவில் உள்ள முன்னரங்கப் பகுதிகளுக்கு அமைச்சர் சென்றார்.

நாங்கள் அதில் இருந்து சொற்ப தூரம் முன்னே சென்று பார்த்தோம்; அங்குள்ள படையினருடன் பேசினோம்.

பெரியமடு வரையும் எந்தப் பொதுமக்களையும் நாம் காணவில்லை. அங்கு படையினரும், பொலீஸாருமே காணப்பட்டனர்.

பல வீடுகள் சேதம் அடைந்திருந்தன. வீடுகள் திறந்தபடி இருந்தன.

இப்படி அவர் கூறின ர். (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.